**தலைப்பு 209 – தேசிய சுவடிக் காப்புத் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2020 யூன் 24 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2020 திசெம்பர் 02 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, 2019 திசெம்பர் 03 ஆம் திகதிய 271/2019 ஆம் இலக்க அரச கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புகள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்கவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறான உள்ளகக் கட்டுப்பாட்டைத் தீர்மானித்தல் என்பன கணக்கீட்டு உத்தியோகத்தரினது பொறுப்பாகும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உபபிரிவின் பிரகாரம் திணைக்களமானது வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடியவாறு அதனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகளைப் பேண வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டின் பொருட்டு ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றைத் தயாரித்து அதனை பேணுவதை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டும். அம்முறைமையின் செயற்திறன் அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு அதற்கமைய முறைமையை ஆக்கபூர்வமாக்குவதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றதென நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்கிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கையை வழங்குவதும் எனது நோக்கமாகும். நியாயமான சான்றுறுதிப்படுத்தல் உயர் மட்ட சான்றுறுதிப்படுத்தலாகும். எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதன் உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் ஏற்படக்கூடுமாதலால் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோர் பொருளாதாரத் தீர்மானங்களை மேற்கொள்ளும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ள வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில் துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும்போதும் மதிப்பிடும்போதும் சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பிரபலமாவதால் தவறான கூட்டிணைவு, போலி ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்த்துக் கொள்ளல் என்பன மோசடி ஏற்படக் காரணமாக அமையலாம்.

- சந்தர்ப்பத்திற்கேற்றவாறான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வம் தொடர்பான அபிப்பிராயத்தை வெளியிடுவதற்குக் கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் அடங்லான நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பன பொருத்தமான மற்றும் நியாயமானவாறு நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும்போது, நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் மதிப்பாய்வு செய்தல்.

எனது கணக்காய்வின் மூலம் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வுக் கண்டுபிடிப்புகள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) இவ் அறிக்கையின் 1.6.1 (ஆ) பந்தியில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்கள் தொடர்பாக முன்னைய ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்ட பரிந்துரைகள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிச் நிலைமைக் கூற்று

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான புத்தகங்கள், பதிவறிக்கைகள், பழமையான உடன்படிக்கைகள் மற்றும் இரகசிய பதிவறிக்கைகள் போன்ற பாரம்பரிய ஆதனங்களின் பெயரளவுப் பெறுமதி ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் கணக்கீடு செய்யப்பட்டோ அல்லது வெளிப்படுத்தப்பட்டோ இருக்கவில்லை. மேலும் அப் பாரம்பரிய ஆதனங்கள் பல ஆண்டுகளாக முறையாக கணக்கெடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேசிய சுவடிக்காப்புத் திணைக்களத்திற்குச் சொந்தமான பழமையான உடன்படிக்கைகள் மற்றும் இரகசிய ஆவணங்கள் கணக்கெடுக்கப்பட்டு அவற்றின் பெயரளவுப் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | திணைக்களம் தற்போது ஆகக்குறைந்தது ஏறத்தாழ 700 பதிவுக் குழுக்களை கொண்டுள்ளதுடன் ஆகக் குறைந்தது ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளிற்கு ஒரு தடவை ஒவ்வொரு பதிவுக் குழுவிற்கும் பரீட்சிப்பு பட்டில்களை தயாரிப்பதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தன. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | கண்டியில் அமைந்துள்ள புதிய கட்டிடம், பழைய கட்டிடம், பழைய சிற்றுண்டிச்சாலை கட்டிடம் மத்திய வளிப்பதனாக்கி முறைமை மற்றும் அது பொருத்தப்பட்ட கட்டிடம் என்பவற்றின் பெறுமதி மதிப்பிடப்பட்டு ஆதனம், பொறி மற்றும் உபகரணத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சகல சொத்துக்களினதும் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிதி நிலைமைக் கூற்றில் குறிப்பிடப்பட வேண்டும். | பரிந்துரையுடன் இணங்குகின்றோம். கண்டியில் அமைந்துள்ள திணைக்களத்தின் வசமுள்ள கட்டிடத்தை கொள்வனவு செய்வதற்கான படிமுறைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 2020 ஆம் ஆண்டில் இக் கட்டிடங்களை மதிப்பிட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் நிர்மாண வேலைகள் ஆரம்பிக்கப்பட்ட திணைக்களப் பிரதான கட்டிடத்தின் புனரமைப்பு, மத்திய வளிப்பதனாக்கி முறைமையை நிறுவுதல், தீயணைப்பு இயந்திரம் மற்றும் உயர் பாதுகாப்பு முறைமை உள்ளடங்கிய வேலைகளிற்கு மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏற்பட்ட கிரயம் ரூபா 992.2 மில்லியன் நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலையின் கீழ் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கட்டிடத்தின் புனரமைப்புக் கிரயங்கள் நிதிக்கூற்றுக்களில் நடைபெறும் வேலையின் கீழ் காட்டப்பட வேண்டும். | இப் புனரமைப்பு பணி கட்டிடங்களின் புனரமைப்பு மற்றும் மேம்படுத்தல் செலவின விடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் இது புனரமைப்பு வேலையாக காணப்படுவதால் கட்டிடக் கொள்வனவு மற்றும் நடைபெறும் வேலையின் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. |

### 1.6.2 முற்பணக் கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கு வகைப்படுத்தல் பொழிப்பு மீதியின் கூட்டுமொத்தம் ரூபா 19,115,871 ஆக காணப்பட்டதுடன் கட்டுப்பாட்டுக் கணக்கு மீதி ரூபா 18,932,678 ஆக காணப்பட்டது. அதற்கிணங்க 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலமாக காணப்பட்ட ரூபா 183,193 வேறுபாட்டை இணக்கம் செய்து தீர்ப்பதற்கு படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 05 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்த ரூபா 18,932,678 மீதியை தீர்ப்பனவு செய்வதற்கு படிமுறைகள் எடுக்கப்பட வேண்டும். | வேறுபாட்டை தீர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் 10 மூலதன செலவின விடயங்களிற்குத் தேவையான மொத்த நிதியேற்பாட்டை திணைக்களம் பெற்றிருந்த போதிலும் மொத்த நிதியேற்பாட்டில் ரூபா 204,278,079 தொகை அல்லது அத்தகைய நிதியேற்பாடுகளில் 37 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரை சேமிக்கப்பட்டிருந்தன. | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட வேண்டும். | மீளாய்வாண்டில் அரச செலவின முகாமைத்துவம் தொடர்பாக தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் 25 சதவீத நிதியேற்பாடுகள் சேமிக்கப்பட வேண்டியிருந்ததால் புதிய ஒப்பந்த உடன்படிக்கைகள் எதுவும் மூலதன செலவினத்திற்காக மேற்கொள்ளப்பட்டிருக்காததுடன் மீண்டெழும் செலவினங்களும் கட்டுப்படுத்தப்பட்டிருந்தன. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 பெறுகை முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| திணைக்களப் பழைய கட்டிடத்தின் புனரமைப்பு, மத்திய வளிப்பதனாக்கி முறைமையை நிறுவுதல், தீயணைப்பு இயந்திர முறைமை மற்றும் உயர் பாதுகாப்பு முறைமை என்பவற்றிற்காக ரூபா 992 மில்லியன் பெறுமதிக்கு கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (அ) அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் அளவீட்டு விலைப் பட்டியலில் குறிப்பிடப்பட்ட தொகைகள் வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் நிரந்தர தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரத்திற்குட்பட்டு செலுத்தப்பட வேண்டிய போதிலும் திருத்தப்பட்ட | வீடமைப்பு மற்றும் நிர்மாண அமைச்சின் நிரந்தர தொழில்நுட்பக் குழுவின் அங்கீகாரம் அளவீட்டு விலைப் பட்டியலிலுள்ள விலைவீதங்களிற்குப் பெற்றப்பட்ட பின்னர் மாத்திரமே | விலைவிகிதங்களிற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக வீடமைப்பு, நிர்மாணம் மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தர தொழில்நுட்பக் குழுவிற்கு 2019 செப்தெம்பர் 16 இல் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் |

| | | | |
|---|---|---|---|
| | விலைகளை கருத்தில் கொள்ளாமல் இரண்டு விலைப் பட்டியல்களினதும் கூட்டுமொத்தமான ரூபா 35,084,477 தொகையின் 90 சதவீதத்தை விஞ்சி கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. | விலைப்பட்டியல்களிற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அக் குழுவால் அங்கீகாரத்தை வழங்குதல் தாமதமாகியிருந்தது. ஆகையால் அமைச்சில் 2019 செப்தெம்பர் 16 இல் நடைபெற்ற செயன்முன்னேற்ற மீளாய்வுக் குழு கூட்டத்தில் விலைப்பட்டியல்களிற்கு கொடுப்பனவு செய்யும் விடயம் கலந்துரையாடப்பட்டு ரூபா 26 மில்லியன் தொகையான விலைப்பட்டியல்களிற்கு நேரடியாக கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | களஞ்சியங்களில் காணப்பட்ட ரூபா 11,757,818 பெறுமதியான பொருட்களிற்குரிய 2 விலைப்பட்டியல்களிற்கான கொடுப்பனவு பௌதீக ரீதியாக சரிபார்க்கப்படாமல் செலுத்தப்பட்டிருந்தது. | பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்ட பின்னர் மாத்திரமே களஞ்சியங்களில் காணப்படும் பொருட்களிற்கு கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வேலைத்தளங்களிலுள்ள பொருட்கள் பௌதீக ரீதியாக சரிபார்க்கப்பட்ட பின்னர் மாத்திரமே கொடுப்பவுகள் மேற்கொள்ளப்படும். |
| (இ) | ஒப்பந்தம் முடிவடையும் திகதி 2020 யூலை 1 ஆக காணப்பட்ட போதிலும் அதன் பௌதீக செயன்முன்னேற்றம் 48 சதவீதமாக காணப்பட்டது. இவ் ஒப்பந்தக் காலப்பகுதியை நீடிப்பதற்கு அல்லது தாமதக் கொடுப்பனவை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 யூலை 7 தொடக்கம் நியாயமான காலப்பகுதியொன்றிற்கு திகதியை நீடிப்புச் செய்த பின்னர் மிகுதி காலப்பகுதிக்கு தாமதக் கொடுப்பனவு அறவிடப்பட வேண்டும். | 2020 ஒக்தோபர் 08 இல் திணைக்களத்திற்கு திகதிகளை நீடிப்புச் செய்வதற்குரிய கடிதங்கள் வழங்கப்பட்டிருந்தன. எதிர்காலத்தில் பரிந்துரை மற்றும் அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (ஈ) | வேலைத்திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்தம் தொடர்பான வேலைத் திட்டம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வேலைத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு உரிய நிறுவனங்களுடன் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |
| (உ) | பௌதீக ரீதியாக நிறைவேற்றப்பட்ட வேலைகள் அல்லது மதிப்பிடப்பட்ட கணிய அளவீட்டு பட்டியலை கருத்தில் கொண்டு ஒப்பந்த விலைப்பட்டியல்களை | விலைப்பட்டியல்களை செலுத்தும் போது மதிப்பிடப்பட்ட கணிய அளவீட்டு அறிக்கைகள் மற்றும் பௌதீக ரீதியாக | எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்க சர்வதேச ஞாபகார்த்த மண்டபத்தில் பணிபுரியும் பிரதம பொறியியலாளர் 2020 ஒக்தோபர் 06 இல் இப் |

| | | | |
|---|---|---|---|
| | தீர்ப்பனவு செய்யும் போது கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பொறியியலாளர் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்ட வேலைகளுடன் உண்மையான செலவினத்தை சரிபார்த்து கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு பொறியிலாளர் அல்லது தொழில்நுட்ப உத்தியோகத்தர் நியமனம் செய்யப்பட வேண்டும். | பணிக்காக நியமனம் செய்யப்பட்டிருந்தார். அதற்கிணங்க விலைப்பட்டியல்களை செலுத்துவதற்கு முன்னர் உரிய பொறியயிலாளரிற்கு விலைப்பட்டியல்களை சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) | மதியுரை நிறுவனத்திற்கும் தேசிய சுவடிக்காப்பு திணைக்களத்திற்கும் இடையேயான ஒப்பந்தம் தொடர்பாக உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | மதியுரை நிறுவனத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட வேண்டும். | புத்தசாசன, சமய மற்றும் கலாச்சார அலுவல்கள் அமைச்சிற்கு ஒப்பந்தம் தொடர்பான அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்வதற்காக கோரிக்கையொன்று வழங்கப்பட்டுள்ளது. |
| (எ) | ஒப்பந்தத்தின் பிஓகியூ 9பீ இன் கீழ் சாதனங்கள் மற்றும் பொருத்துக்களிற்காக ரூபா 70 மில்லியன் தொகை ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அத்தகைய வேலை மற்றும் சாதனங்கள் மற்றும் பொருத்துக்களின் அளவீடுகள் விபரமாக குறிப்பிடப்பட்டிருக்கவில்லை. | வேலை மற்றும் சாதனங்கள் மற்றும் பொருத்துக்களின் அளவீடுகள் விரிவாக குறிப்பிடப்பட வேண்டும். | மதிப்பீட்டின் 9பீ இன் கீழ் சாதனங்கள் மற்றும் பொருத்துக்களின் அளவீடுகளை விபரமாக குறிப்பிடும் தேவைப்பாட்டை சீஈசீபீ மற்றும் சீஈஎஸ்எல் இற்கு தெரிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |